தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையத்தில் சலங்கை நாதம் கலை விழா; அகில இந்திய கைவினைக் கண்காட்சி இன்று தொடக்கம்

தஞ்சாவூர்.மே.10.

தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையத்தில் சலங்கை நாதம் கலை விழா மற்றும் அகில இந்திய கைவினை கண் காட்சி இன்று 10–ம் தேதி தொடங்குகிறது. விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்கிறார்.

தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மைய இயக்குனர் கோபாலகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:– தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மைய வளாகத்தில் சலங்கைநாதம் கலை விழா மற்றும் அகில இந்திய கைவினை கண்காட்சியும் 10ஆம் தேதி முதல் 18ஆம் தேதி வரை 9 நாட்கள் நடக்கிறது. இந்தியாவின் பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்த நாட்டுப்புற மற்றும் பழங்குடியினர் நடனங்கள் பல்வேறு மாநில கைவினைப் பொருள்கள் மற்றும் பல மாநில உணவு அரங்குகள் பிற்பகல் 3.30 மணி முதல் இரவு 9 மணி வரை கண்காட்சி மற்றும் விற்பனை நடைபெறும். விழா நாட்களில் கலை நிகழ்ச்சிகள் தினம் மாலை 6:30 மணி முதல் இரவு 9:30 வரை தென்னக பண்பாட்டு மைய திறந்த வெளி கலையரங்கில் நடைபெற உள்ளது.

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம், நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி நீலமேகம், மாநகராட்சி மேயர் சண். ராமநாதன், துணை மேயர் மருத்துவர் அஞ்சுகம் பூபதி உள்பட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

நிறைவு நாளில் தமிழக ஆளுநரும் தென்னகப் பண்பாட்டு மைய தலைவருமான ஆர்.என். ரவி பங்கேற்க உள்ளார் என கூறினார்.

அம்மா பேரவை சார்பாக திண்ணை பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசாரம் எடப்பாடியார் ஆணைக்கிணங்க மாநகர் மாவட்ட கழகச் செயலாளர் செல்லூர் ராஜூ வழிகாட்டுதலில் மதுரை மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ்.எஸ்.சரவணன், பேரவை நிர்வாகிகள் ஆகியோர் ஏற்பாட்டில் முனியாண்டி கோவில் தெரு அசோக் தெரு மற்றும் 44வது வார்டு பகுதிகளில் ஜெயலலிதா பேரவை செயலாளர் சரவணன் இல்லை பிரச்சாரம் செய்து துண்டு பிரசுரங்களை வழங்கினார் அருகில் பேரவை நிர்வாகிகள் உள்ளனர்.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் OMKARA ASSETS RECONSTRUCTION PVT. LTD.
பதிவு அலுவலகம்: எண்.9 எம்.பி.நகர், 1வது தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர் 641607, தமிழ்நாடு, தொலைபேசி எண்: 04212221144
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47வது மாடி, என்.சி. கேல்கர் மார்க், ஆர்.ஜி. கட்கரி சௌக், தாதர் (மேற்கு) மும்பை 400028 ;
தொலைபேசி எண்: 022-26544000 / 9323642445 / 9167490977

(பிற்சேர்க்கை IV A (விதி 8(6)ஐ பார்க்கவும்)

அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002ன் விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

ஈடுபெற்ற கடன் வழங்கிய லட்சுமி விலாஸ் வங்கியின் (LVB) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான, (LVB நவம்பர் 27, 2020 அன்று DBS வங்கி இந்தியா லிமிடெட் (DBIL) உடன் இணைக்கப்பட்டது), கீழ் கையொப்பமிட்டவர் 1. M/S **ஆர்வி ராசி கிரவ்னெட் மில் (கடன்தாரர்), 2. V இளஞ்சியம் 3. V சரவணன் (உரிமையாளர்/ அடமானதாரர்/ உத்தரவாததாரர்கள்)** ஆகியோரால் ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம்/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டார் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/உடன் கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின், ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் (ஓம்காரா பிஎஸ் 07/2023-24 அறக்கட்டளையின் அறங்காவலராக செயல்படுகிறது) 30.11.2023 தேதியிட்ட ஒதுக்கீட்டு ஒப்பந்தத்தின்படி கடன்தாரர்/உடன் கடன்தாரர்/உத்தரவாததாரர் மற்றும் டிபிஸ் பேங்க் இந்தியா லிமிடெட்டின் அடிப்படைப் பாதுகாப்புடன், மேலே கூறப்பட்ட நிலுவையில் உள்ள கடன்கள் முழுவதையும் பெற்றுள்ளது. மேற்கூறிய கடன்தாரர்/ உடன் கடன்தாரர்/உத்தரவாததாரர்களிடம் இருந்து ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட், 31.07.2019 அன்று வரையிலான **ரூ.82,64,440.81 (ரூபாய் எண்பத்திரண்டு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து நானூற்று நாற்பது மற்றும் எண்பத்தோரு பைசா மட்டும்)** மற்றும் வட்டி மற்றும் செலவுகளை வசூலிக்க கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் **30.05.2025 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை** (ஏலங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம் 29.05.2025 மாலை 5:00 மணிக்குள்) "எங்கே எப்படி உள்ளதோ அப்படியே", "உள்ளது உள்ளபடி", "எந்தவித மாற்றமும் இல்லாமல்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். ஈடுபெற்ற சொத்துக்களை மீட்பதற்காக, கிடைக்கும் நேரத்தைப் பெறுதித்து வரையில், SARFAESI சட்டம், 2002ன் பிரிவு 13(8)ன் படி விதிகளுக்கு இணங்க கடன்தாரர்/உடன் கடன்தாரர்/உத்தரவாததாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அசையாச் சொத்துக்கள், ரிசர்வ் விலை மற்றும் டேவணித் தொகை டெபாசிட் மற்றும் தெரிந்த வரையிலான வில்லங்கம் (ஏதேனும் இருந்தால்) அது குறித்த விவரம் பின்வருமாறு:

சொத்து குறித்த விவரம் : எஸ்.எப்.எண். 172/2A, மனை எண். 7,8,13 & 14, கதவு எண். 1415/6, 1415/8, பெரத்தினம் நகர், செங்கம்பட்டி சாலை, விராலிமலை, இலுப்பூர், புதுக்கோட்டை மாவட்டம். விஸ்தீரணம் 8800 சதுர அடி.

மின்னணு ஏலத் தேதி : 30.05.2025 அன்று காலை 11.00 மணி | ஆய்வுத் தேதி : 22.05.2025 அன்று மாலை 2.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

ரிசர்வ் விலை : 71,00,000 | EMD : 7,10,000 (குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை ரூ.70,000/-

பங்கேற்பு ஏலக் கூடிதம் / KYC **ஆவணம்** / EMD **சான்று சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்: 29.05.2025 மாலை 5:00 மணிக்குள்**

தெரிந்தவரை பொறுப்புகள்/வில்லங்கம் : தெரியவில்லை | சுவாதீன நிலை : அடையாளம்

விதிமுறைகள் & நிபந்தனைகள்: 1. OARPLஇன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர் M/s. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், குர்கான் மூலம் ஏலம் 'ஆன்லைனில்' நடத்தப்படும். ஆன்லைன் ஏலத்திற்கான ஏலப் படிவம், அறிவிப்பு, ஆன்லைன் ஏல விற்பனைக்கான பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின்னணு ஏல டெண்டர் ஆவணம் https://www.bankeauctions.com (உதவிக்கான மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com உதவிக்கான மொபைல் எண். +91 7291981124/25/26). என்ற இணையதளத்தில் கிடைக்கிறது. 2. EMD தொகையை டெபாசிட் செய்து, உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லை உருவாக்குதல், தரவைப் பதிவேற்றுதல், ஏலத்தைச் சமர்ப்பித்தல், மின்னணு ஏலச் செயல்முறை குறித்த பயிற்சி போன்றவற்றில் உதவி தேவைப்படும் ஏலதாரர்கள், மின்னணு ஏல சேவை வழங்குனரைத் தொடர்பு கொள்ளலாம் "M/s. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட்", உதவிக்கான தொலைபேசி எண்: +91 7291981124/25/26, உதவிக்கான மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com, திரு. பாவிக் பாண்டியா, மொபைல்: 8866682937 மின்னஞ்சல் முகவரி : maharashtra@c1india.com. 3. சொத்து தொடர்பான ஏதேனும் விளவலுக்கு அல்லது சொத்து அட்டவணை சொத்து குறித்த ஆய்வுக்கு, ஆர்வமுள்ள நபர் சம்பந்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்: **சபேரதீப் பானர்ஜி (மொபைல் 7558392736), மின்னஞ்சல் முகவரி** : s.banerjee@omkaraarc.com அல்லது வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளலாம். 4. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்தவரை மற்றும் தகவலின் படி, மேலே உள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ளதைத் தவிர, சொத்து மீது எந்தவித வில்லங்கமும் இல்லை. 5. ஏலங்களைச் சமர்ப்பித்த அனைத்து ஏலதாரர்களும், மின்னணு ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்துப் புரிந்துகொண்டதாகக் கருதப்படுவார்கள், மேலும் அவற்றுக்குக் கட்டுப்படுவார்கள். மேலும், தொடர்புடைய கட்சி பரிவர்த்தனைகளின் அடிப்படையில், 2016ம் ஆண்டு நெறிமுத்தல் மற்றும் திவால்நிலை சட்டத்தின் பிரிவு 29Aன் நோக்கத்தின்படி ஏலதாரர்கள் பங்கேற்றதாகக் கருதப்படும். ஏலதாரர்கள் நெறிமுத்தல் மற்றும் திவால்நிலைச் சட்டம், 2016ன் பிரிவு 29Aன் கீழ் ஏலத்துடன் உறுதிமொழி ஆவணத்தை வழங்க வேண்டும், அதை வழங்கத் தவறினால் செலுத்தப்பட்ட அந்த தொகை பறிமுதல் செய்யப்படும். **விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு** http://omkaraarc.com/auction.php**இல் வழங்கப்பட்ட இணைப்பைப் பார்க்கவும்.**

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002 விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ்

விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002 விதி 8(6) மற்றும் 9(1) மற்றும் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்பனையை நடத்துவது பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும், அவர்கள் விரும்பினால் மேலே குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகையை கட்டணம் மற்றும் செலவுகளுடன் செலுத்துவதன் மூலம் சொத்துக்களை மீட்டுக்கொள்ளவும், மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) / உடன் கடன்தாரர்(கள்) / அடமானதாரர்களுக்கு இந்த அறிவிப்பானது பதினைந்து (15) நாட்களுக்கான ஒரு கட்டாய அறிவிப்பாகும். பணம் செலுத்தத் தவறினால், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ஈடுபெற்ற கடன் வழங்கியவர் விருப்பப்படி, கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8 (5)ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட எந்த முறையிலும் சொத்து விற்கப்படும்.

தேதி: 10.05.2025
இடம்: மும்பை

ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்
("ஓம்காரா பிஎஸ் 07/2023-24 அறக்கட்டளையின்" அறங்காவலராக செயல்படுகிறது)

திருப்பைஞ்சீலி நீலிவனேஸ்வரர் கோவில் தேரோட்டம்: திரளான பக்தர்கள் தேர் வடம் பிடித்து இழுத்தனர்

துறையூர், மே.10–

திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் தாலுக்கா திருப்பைஞ்சீலியில் மிகவும் பிரசித்தி பெற்ற சிவாலயமான நீலிவனேஸ்வரர் கோவில் தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

மேல சிதம்பரம் என பக்தர்களால் அழைக்கப்படுவதும் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் சுந்தரர் ஆகிய மூவரால் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலமாகவும் சிவபெருமான் திருநாவுக்கரசருக்கு திருக்கட்டமுது அளித்து காட்சி அருளியதும் அதிகார வல்லவராகிய சிவபெருமான் எமதர்மராஜனுக்கு இழந்த பதவியையும் அதிகாரத்தையும் மீண்டும் வழங்கியதும் தேவலோக சப்த கன்னிகள் என்றும் அழியாத வரம் பெற்று

கல்வாழைகளாக அவதரித்து ஆண் பெண் இருபாலரின் சகல தோஷங்களை நிவர்த்தி செய்து திருமணத்தடை போக்கக்கூடிய சிறப்புகள் வாய்ந்த திருக்கோயிலாகவும் விளங்குகின்ற திருப்பைஞ்சீலி நீலிவனேஸ்வரர் திருக்கோவிலில் கடந்த மே 1ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கிய சித்திரை பிரமோற்சவ விழாவானது தொடர்ந்து ஒவ்வொரு நாள் காலையில் சுவாமி அம்பாள் பல்லாக்கில் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் இரவில், சிம்ம வாகனம் , கிளி வாகனம் , யாழி வாகனம், பூத வாகனம் , பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்று, சுவாமி அம்பாளுக்கு திருக்கல்யாண வைபவமும் நடைபெற்றது. அதனை தொடர்ந்து முக்கிய நிகழ்வான சித்திரை திருத்தேர் வடம் பிடித்தல் நிகழ்ச்சி நேற்று (09 ந் தேதி) நடைபெற்றது. நேற்று அதிகாலை 5 மணிக்கு மேல் 6 மணிக்குள் விசாலாட்சி அம்பாள் , நீலிவனேஸ்வரர் சுவாமி தம்பதி சமேதராக திருத்தேரில் எழுந்தருளினார். பிற்பகல் 3 மணிக்கு மேல் திருத்தேர் வடம் பிடித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. மேளதாளங்கள் முழங்க அதிர்வெட்டுகள் ஒலிக்க நமச்சிவாய நமச்சிவாய எனும் பக்தி கோஷம் முழங்க திரளான பக்தர்கள் திருத்தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

கவுண்டம்பட்டி மேலூர் கீழூர் வாழ்மானபாளையம் மேலூர் கீழூர், ஈச்சம்பட்டி, மூவராயன் பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமப்பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் தேரோட்டத்தில் பங்கேற்றனர்.

மேலும் தேரோட்ட நிகழ்ச்சியில் கைலாய வாத்தியம் மற்றும் மேளதாளங்கள் முழங்க தேரோட்டம் நடைபெற்றது. தேரோடும் வீதிகளில் பக்தர்கள் வெள்ளத்தில் வந்த திருத்தேர் மாலை 7 மணி அளவில் நிலைக்கு வந்தடைந்தது. விழாவிற்கான ஏற்பாடுகளை திருக்கோவில் தக்காரும் உதவி ஆணையருமான லட்சுமணன் மேற்பார்வையில் செயல் அலுவலர் மனோகரன் மற்றும் அனைத்து கிராம பட்டயதாரர்கள், திருக்கோவில் பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர். குற்ற சம்பவங்கள் நடக்காமல் தடுக்கும் பொருட்டு, பக்தர்களின் பாதுகாப்பு நலன் கருதி ,திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வ நாகரத்தினம் உத்தரவின் பேரில் ஜீயபுரம் துணை சூப்பிரண்ட் பழனி தலைமையிலும் சமயபுரம் தீயணைப்பு நிலைய அலுவலர்மனோகர் தலைமையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். தொடர்ந்து இன்று (10ம் தேதி) சுவாமி தேர் கால் பார்த்தல் நிகழ்ச்சியும் நடராஜர் புறப்பாடும் அதனைத் தொடர்ந்து தீர்த்தவாரி நடைபெற்று, 11ம் தேதி இரவு 7 மணி அளவில் சுவாமி அம்பாள் முத்து பல்லக்கில் எழுந்தருளி திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது. சிறப்பு வழிபாடுகளை சங்கர்,சண்முகம், சிவக்குமார், பிரபாகரன் உள்ளிட்ட சிவாச்சார்யார்கள் நடத்தினர்.

தேசிய நிறுவனச்சட்டத் தீர்ப்பாயம்
சென்னை அமர்வு-II முன்பாக
கூட்டு நிறுவன மனு எண்
No.CP(CAA)/10/CHE/2025
கூட்டு நிறுவன விண்ணப்ப எண்
No. CA(CAA)/62/CHE/2024 தொடர்பாக
நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு 230 முதல் 232 வரை சார்ந்த விஷயத்தில்
மற்றும் சேஜிட்டேரியஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ப்ரைவேட் லிமிட்டெட்
நிறுவனமும் ஸ்ரீமாயி எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனமும்
ஒன்றிணையும் திட்டம் தொடர்பான விஷயத்தில்

சேஜிட்டேரியஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ப்ரைவேட் லிமிட்டெட்
பதிவு அலுவலகம்: 232, டீ எஸ்டேட்ஸ், ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர்- 641 018. - முதல் மனுதாரர் / பரிமாற்ற நிறுவனம்

ஸ்ரீமாயி எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிட்டெட்
பதிவு அலுவலகம்: 232, டீ எஸ்டேட்ஸ், ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர்- 641 018. - இரண்டாம் மனுதாரர் /மாற்றம் பெறும் நிறுவனம்

நிறுவன மனு விசாரணை அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவுகள் 230 முதல் 232 வரை வழங்கப்பட்டுள்ள நடைமுறைகளின் கீழ், சேஜிட்டேரியஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஸ்ரீமாயி எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கிடையேயான இணைப்புத் திட்டத்திற்கு அனுமதி பெறும் நோக்கில், மேற்கூறிய நிறுவனங்கள் 30 ஏப்ரல், 2025 அன்று கூட்டு நிறுவன மனுவை தாக்கல் செய்துள்ளன.

மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் சென்னை அமர்வு - II முன்பு அந்த மனுவிற்கான விசாரணை, 25 ஜூன், 2025 அன்று நடைபெறும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனுவை ஆதரிக்க அல்லது எதிர்க்க விரும்பும் எந்த ஒரு நபரும் அதன் நோக்கத்தை தெரிவித்து தமது பெயர் முகவரியுடன் தாமோ அல்லது தனது வழக்கறிஞர் பிரதிநிதி மூலமாகவோ முறையாக கையொப்பமிட்டு அறிவிப்பு ஒன்றை இந்த மனு விசாரணைக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக மனுதாரரின் வழக்கறிஞருக்கு வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும். மனுவை எதிர்ப்பதாக இருப்பின் அதை எதிர்ப்பதற்கான காரணங்கள் அல்லது பிரமாண பத்திரத்தை அறிவிப்புடன் சேர்க்க வேண்டும். மேற்படி மனுவுடன் ஆதார ஆவணங்களைப் பெற விரும்பும் எந்த ஒரு நபரும் கீழ் கையொப்பமிட்டவரிடம் அதை பெற்றுக் கொள்ளலாம்.

சென்னையில் மே 6 2025 தேதி இடப்பட்டது

வி. ஸ்ரீனிவாசன்
விண்ணப்பதாரர் வழக்கறிஞர்
பிளாட் எண் A2, கீழ் தளம்,71/21,
Dr.ரங்கா ரோடு, மயிலாப்பூர், சென்னை - 600 004.
மின்னஞ்சல் advocatevs@gmail.com

homefirst We'll take you home

Home First Finance Company India Limited
CIN: L65990MH2010PLC240703,
Website: homefirstindia.com Phone No.: 180030008425 Email ID: loanfirst@homefirstindia.com

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு

Ref: **கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002, விதி 8, துணை விதி (1)ன் கீழ் சுவாதீனம் எடுத்த அறிவிப்பு**

கீழே கையொப்பமிட்டுள்ள ஹோம் பார்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் (சட்டம் எண். 54 ஆம் 2002) மற்றும் 13(2)வது பிரிவு மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, கீழ் கொடுக்கப்பட்டுள்ள அந்தந்த தேதியிட்ட டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய பாக்கி தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு உங்களை/கடன்தாரரர்களை கேட்டுக் கொண்டிருந்தார். எனினும் நீங்கள்/கடன்தாரர்கள் அனைவரும் குறிப்பிட்ட பாக்கித் தொகையை நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் செலுத்தத் தவறிவிட்டீர்கள். எனவே, சர்பாசி சட்டம் 2002 பிரிவு 13, துணை பிரிவு (4) மற்றும் அதன் கீழுள்ள விதிகளின்கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, ஹோம் பார்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக் கொண்டது.

வ. எண்	கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள் பெயர்	அடமான சொத்து விவரம்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி	டிமாண்ட் நோட்டீஸ் தேதியன்று மொத்த பாக்கித் தொகை (ரூ.)	சுவாதீன தேதி
1	மகேந்திரன் ஆர், நாகரத்தினம் ஆர்	வீடு – டி.எஸ்.எண். 1073, 1072, வார்டு எண். 2 வடக்கு பூந்தோட்ட தெரு, வடகரை, பெரியகுளம் நகராட்சி டவுன், பெரியகுளம் தாலுக்காக, பெரியகுளம் இணை II சார் பதிவாளர் அலுவலகம், பெரியகுளம், தேனி, தமிழ்நாடு – 625601. எல்லைகள்: வடக்கு : கிழக்கு மேற்காக பாதை, தெற்கு : எண். 7 நிலம், கிழக்கு : எண். 9 நிலம், மேற்கு : ரமேஷ் நிலம்.	05 March 2025	8,73,388	07 May 2025
2	அசோக் குமார் நாகேஸ்வரன், பிரவீன்குமார் என், பரமேஸ்வரி என், ஷோபனா என்	வீடு – எஸ்.எண்.154/5பி, வார்டு எண்:3, பிள்ளையார்கோவில் தெரு, கோவில்பாகுடி கிராமம், மதுரை வடக்கு தாலுக்கா, மதுரை கூட்டு IV துணைப்பிரிவு, மதுரை, மதுரை, தமிழ்நாடு – 625018. எல்லை: வடக்கு : பெரியமணியர்சேர்வை பகுதி நிலம், மாயாண்டி சேர்வை வகையறா நிலம், ராமலிங்கம் வகையறா நிலம், தெற்கு : பெரியமணிசேர்வை பகுதி நிலம், சோனை சேர்வை பகுதி நிலம், கிழக்கு மேற்காக பாதை, கிழக்கு : சோனை சேர்வை வகையறா நிலம், கட்டவீரபத்திரன்சேர்வை வகையறா நிலம், மேற்கு : ரெங்கசாமி சேர்வை வகையறா நிலம்.	05 March 2025	11,82,312	07 May 2025
3	ஷாகுல் ஹமீத் என், பாவீன் கே	பிளாட் எஸ்.எப்.எண்.14/3, ஆர்.எஸ்.எண். :14/3A1A, துணைப்பிரிவு எஸ்.எண். :14/3A1A1A, எஸ். எண்.14/3A11A, பட்டா எண்:180, மனை எண்:6 தெற்குப் பகுதி, சந்திரலேகா நகர், கொண்டபேத்தன் கிராமம், ஆண்டார்கொட்டாரம் பஞ்சாயத்து, மதுரை வடக்கு தாலுகா இப்போது மதுரை கிழக்கு தாலுகா, தல்லாகுளம் எஸ்ஆர்ஓ இப்போது கருப்பாயூரணி எஸ்ஆர், மதுரை, தமிழ்நாடு 625020. எல்லை: வடக்கு : மனை எண்:6 & 15 அடி பொதுவான சாலை, தெற்கு : காலி நிலம் & மனை எண்:6, கிழக்கு : காலி நிலம் சீனிக்கு சொந்தமானது, மேற்கு : மனை எண்.7.	05 March 2025	11,09,562	07 May 2025
4	ஆறுமுகம் எஸ், நிர்மலா ஏ	வீடு – கதவு எண். 76, எஸ்.எண். 73/1, ஜி.ஆர் எஸ்.எண். 146/30, விழுப்பனங்குறிச்சி கிராமம், அரியலூர் தாலுக்கா கீழப்பழூர் சார் பதிவு அலுவலகம், அரியலூர் பதிவு மாவட்டம் &, அரியலூர் 621715. எல்லைகள் : வடக்கு : சாலை, தெற்கு : சாலை, கிழக்கு : சாலை, மேற்கு : திருநயம் வீடு.	05 March 2025	5,84,287	07 May 2025

கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்/உத்தரவாததாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(4)ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிகளின் 8வது விதிமுறைக்கு இணங்கவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்துக்கள்/ஈடு பெற்ற சொத்துக்கள் ஹோம் பார்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டில் செலுத்த வேண்டிய தொகை, முழுமையாக செலுத்தும் காலம் வரையிலான வட்டிக்கு பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்துக்கள்/ஈடு பெற்ற சொத்துக்கள் மற்றும் அதன் ஏதாவது ஒரு பகுதி தொடர்பாக எந்தவித வர்த்தகத்தையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு (8)–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரருக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

இடம் : மதுரை
தேதி : 10.05.2025

ஒப்பம்: அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்

திமுக சார்பில் சாதனை விளக்க பொதுக் கூட்டம்

சோழவந்தான் மே.10

சோழவந்தான் அருகே முள்ளிப்பள்ளம் கிராமத்தில் வாடிப்பட்டி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் 4 ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வாடிப்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் பசும்பொன் மாறன் தலைமை தாங்கினார். வடக்கு ஒன்றிய செயலாளர் பால் ராஜேந்திரன் பேரூர் செயலாளர்கள் சத்தியப்பிரகாஷ் பால்பாண்டி பொதுக்குழு உறுப்பினர் ஸ்ரீதர் பேரூராட்சி தலைவர் ஜெயராமன் வக்கீல் முருகன் முன்னிலை வகித்தனர். முள்ளிப்பள்ளம் கிளை செயலாளர் கேபிள் ராஜா வரவேற்றார். சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் தலைமை கழக பேச்சாளர் சிவமுத்துவளவன் 4 ஆண்டு கால திமுக அரசின் சாதனைகளை விளக்கி பேசினர்.

இதில் மாவட்ட இளைஞர் அணி வெற்றிச்செல்வன் மகளிரணி ரேணுகா ஈஸ்வரி மீனவரணி முனியாண்டி ஒன்றிய நிர்வாகிகள் ராஜாராம் ராஜா பெரிய கருப்பன் அவைத்தலைவர் தீர்த்தம் பேரூர் துணை செயலாளர் ஸ்டாலின் பொருளாளர் கண்ணன் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் ரேகா வீரபாண்டி கார்த்திகா ஞானசேக